# சான்றாளரின் சாட்சிய வாக்குமூலம்
# (DEPOSITION OF WITNESS)

மேற்கோள்:– 1. குற்றவியல் நடைமுறை விதிகளின் 42–ஆம் விதி, 53–ஆம் நீதிமன்ற படிவம்
(Rule 42 and Judicial from No. 53 of Criminal Rules of Practice)
2. குற்றவியல் நடைமுறை தொகுப்பு சட்டத்தின் XXIII–ஆம் அத்தியாயம்
(Chapter XXIII Code of Criminal Procedure)

## மூன்றாம் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, சேலம்
(IN THE COURT
OF THE III–ADDITIONAL DISTRICT SESSIONS JUDGE, SALEM).

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | :– | S.C.No.100/2025 |
| வாக்குமூலம் அளிக்கும் சான்றாளரின் வரிசை எண் | :– | அ.சா– 04 ( PW– 04 ) |
| பெயர் | :– | இராதா கிருஷ்ணன் |
| கணவரின்/தகப்பனாரின் பெயர் | :– | கிருஷ்ணன் |
| ஊர் | :– | |
| வருவாய் வட்டம் | :– | |
| சமூகம் (சாதி) | :– | |
| தொழில் | :– | |
| மதம்/சமயம் | :– | |
| வயது | :– | |

**2026–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 10 ஆம் நாள் 1969–ஆம் ஆண்டில் ஆணையுறுதிச் சட்டத்தின் (நடுவன் சட்டம் 44/1969) வகையங்களுக்கு இணங்க சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படடது.**

**சான்றாளரின் கையொப்பம்**

எதிரி நேர்நிறுத்தப்பட்டார். எதிரியின் வழக்குரைஞர் தோன்றினார்.

<u>முதல்விசாரணை:-</u>

நான் சேலம், ஓமலூர் வட்டத்தில் தொளசம்பட்டி மனக்காட்டூரில் வசிக்கிறேன். நான் விவசாய தொழில் செய்கிறேன். நீதிமன்றத்தில் தோன்றியுள்ள எதிரி கனகராஜை தெரியும். அவர் எனக்கு அத்தை மகன். சிவக்குமார் எனக்கு அண்ணன். கவிதா சிவக்குமாரின் மனைவி.

என் அண்ணன் சிவக்குமாரும் எதிரி கனகராஜிம் ஒன்றாக படித்த -வர்கள். எதிரி கனகராஜ் என் அண்ணன் சிவக்குமாருடன் அவ்வபோது சண்டை போடுவார். எதிரி கனகராஜின் தகப்பனார் என் அண்ணனை எதிரி கனகராஜிவுடன் ஒப்பிட்டு அவன் படித்து ஆசிரியராக வேலை செய்கிறான் நீ ஏன் இப்படி உள்ளாய் என்று சொல்வார். நீ அரசு வேலையில் இருந்தால் பெரிய புடுங்கியா என்று சொல்லி என் அண்ணனிடம் எதிரி கனகராஜ் சண்டைபோடுவார். எதிரி கனகராஜ் அவருடைய தாயார் ராஜம்மாளை அடித்துவிட்டார். என் அண்ணன் வீடு பக்கத்தில்தான் உள்ளது. என் அண்ணன் ஏன்டா கனகராஜ் இப்படி செய்கிறாய் என்று கேட்டதற்கு நீ என் பிரச்சனையில் தலையிடாதே போட என்று சொல்லிவிட்டார்.

மூன்று மாதங்கள் கழித்து 09.10.2024-ஆம் தேதியன்று என் அண்ணன் வீட்டிற்கு மாலை 05.00 மணிக்கு எதிரி சென்று என் அண்ணன் இல்லாதா நேரத்தில் அண்ணியிடம் உன் கணவரை என்றாவது ஒருநாள் கொன்று விடுவேன் என்று சொல்லி சத்தம்போட்டு விட்டு சென்றதாக என்னிடம் சொன்னார். எதிரி உறவினர்தானே என்று நாங்கள் பெரிதுபடுத்தவில்லை.

10.10.2024-ஆம் தேதியன்று 04.35 மணிக்கு என் வீட்டில் இருந்தேன். என் அண்ணி என்னை கைபேசியில் அழைத்து அண்ணனை அத்தை மகன்

வெட்டிவிட்டான் என்று சொன்னார். நான் என் இருச் சக்கர வாகனத்தில் தொளசம்பட்டி பள்ளிக்கூடம் இருக்கும் இடத்திற்கு சென்றேன். நான் சென்ற நேரத்தில் அங்கு தனியார் அவசர ஊர்தியும் வந்திருந்தது. நான் என் அண்ணனை பார்த்தேன். வலது கையில் துணிபோட்டு கட்டியிருந்தார்கள். இரத்தம் வந்துகொண்டிருந்தது. என் அண்ணனை அவசர ஊர்தியில் ஏற்றி சேலம் வள்ளி மருத்துவமனைக்கு கொண்டுசென்றோம். அண்ணியும் உடன் இருந்தார். அன்று இரவு 08.00 மணிக்கு தொளசம்பட்டி காவல் நிலையத் -தினர் வந்து அண்ணியை விசாரித்தனர்கள். என்னையும் விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை**

முதல்நாள் அண்ணியை எதிரி மிரட்டியது குறித்து அன்று மாலையே எனக்குத் தெரியும். அதுச் சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுக்க -வில்லை என்றால் சரிதான். என் அண்ணனுக்கும் எதிரிக்கும் இடையே 04 சென்ட் இடம் சம்மந்தமாக பிரச்சனை இருந்தது என்றால் இல்லை. எதிரி வேறு ஊரை சேர்ந்தவர். எங்கள் அத்தைக்காக நாங்கள் 10 சென்ட் இடம் கொடுத்தோம். எனக்கு அண்ணி தகவல் சொல்லவில்லை என்றால் சரியல்ல. காயமுற்றவரின் அண்ணன் என்பதால் நான் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் சம்மந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல.

Sd/-V. Pugazhenthi,
Additional District & Session Judge,
Salem.